7.3.2020

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

## ஆண்டறிக்கை

திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 13.9.2013 அன்று தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் மாண்புமிகு டாக்டர் **ஜெ. ஜெயலலிதா** அவர்களால் காணொளிக் காட்சி வழியாகத் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியின் புதிய கட்டிடம் 2.7.2018 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் **எடப்பாடி பழனிச்சாமி** அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக்கல்லூரியில் பி.ஏ. தமிழ், ஆங்கிலம், பி.காம் ஆங்கிலவழி, தமிழ்வழி, பிஎஸ்.சி. கணிதம், கணினி அறிவியல், காட்சித் தொடர்பியல் ஆகிய இளநிலை பாடப்பிரிவுகளும், எம்.ஏ தமிழ், எம்.எஸ்.ஸி கணிதம் ஆகிய முதுநிலை பாடப்பிரிவுகளும் கற்பிக்கப்பெற்றுவருகின்றன.

இன்று (7.3.2020) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டு 88 மாணவ மாணவியர்க்குப் பட்டங்களை வழங்கி விழாவினைச் சிறப்பித்தார்.

விழுப்புரம் அறிஞர் அண்ணா கலைக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த நான் இக்கல்லூரிக்கு இவ்வாண்டு ஜனவரி மாதம் இருபத்து நான்கு ஆம் தேதி முதல் முதல்வராகப் பதவி உயர்வு பெற்றுப் பணியாற்றி வருகிறேன். இக்கல்வியாண்டின் அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### ஆசிரியர் அலுவலர்களின் இடப்பெயர்வும், பணியேற்பும்

நம் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய முனைவர் ம. சுப்பிரமணி; அவர்கள் முதல் நிலைக் கல்லூரி முதல்வராகப் பதவி உயர்வு பெற்றுத் திருவண்ணாமலை அரசினர் கலைக்கல்லூரிக்கு

முதல்வராகப் பணியாற்றி வருகிறார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் கல்லூரியில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பணி நிரவல் அடிப்படையில் வருகை தந்து, கணினி அறிவியல் துறையில் பணியாற்றிய திருமதி.சு. செந்தமிழ்ச்செல்வி, கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரிக்கும் திருமதி ரா. மங்கையர்கரசி அவர்கள் திருவெறும்பூர் அரசு கலைக்கல்லூரிக்குப் பணி மாறுதல் பெற்றுச் சென்றுள்ளனர்.

சேதுபதி அரசு கலைக்கல்லூரியில் நிதியாளராகப் பணியாற்றிய திரு.ப. காசிலிங்க சுப்பிரமணியன் அவர்கள் இடப்பெயர்வு பெற்று நம் கல்லூரியில் பணியாற்றி வருகிறார்.

நம் கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணியாற்றிய திரு.செ.அன்புமணி அவர்கள் உதவியாளராக பணி உயர்வு பெற்று இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார்.

இக்கல்லூரியில் உதவியாளராகப் பணியாற்றி வரும் திரு. எஸ். ஆனந்த கிருஷ்ணமூர்த்தி இவ்வாண்டு பணியில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கும் பாராட்டுகள்.

**<u>மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையும் கல்வி உதவித்தொகையும்</u>**

2019-20 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் மொத்தம் 968 மாணவ மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். இவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் உரியமுறையில் கல்வி உதவித்தொகை வழங்கப்பெறுகிறது. இக்கல்வியாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவிகள் பிரிவில் 205 பேருக்கு கல்வி உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்று வருகிறது. பிற்படுத்தப்பட்ட மிகவும்

பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர் பிரிவில் 385 பேருக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப் பட்டுவிட்டது.

**கட்டணமில்லா பேருந்து பயண அட்டை**

இவ்வாண்டு 507 மாணவர்களுக்குத் தமிழக அரசின் மாணவர்க்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டைகள் 507 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்வழி கிராமப்புற மாணவ மாணவியர்கள் கல்வி கற்க வசதி ஏற்படு;த்தப்பெற்றுள்ளது.

**கல்லூரியின் வளர்ச்சிப் பணிகள்**

இக்கல்லூரியில் இவ்வாண்டு நூலகத்திற்கு இரண்டரை லட்சம் ரூபாய் மதிப்பில் துறைகளுக்கான நூல்கள் வாங்க நிதி ஒதுக்கப்பட்டு, அதற்கான நூல்களும் வாங்கப்பெற்றுள்ளன. துறைகளுக்கான ஆய்வு இதழ்களும் வாங்கப்பெற்றுவருகின்றன.

கணினிப் பயிற்சித் திட்ட நிதியிலிருந்து கல்லூரிக் கல்வி இயக்குனர் அவர்களின் அனுமதியுடன் ஆறு லட்சம் ரூபாய் மதிப்பில் 10 கணினிகளும் 5 கே.வி. மின்சேமிப்புக் கலமும், அச்சு இயந்திரமும் வாங்கப் பெற்றுள்ளன.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்குக் கணினி பயிற்சித் திட்டமும் செயல்படுத்தப்பட்டு மாணவர்களுக்குக் கணினி அறிவுத்திறன் பெருக வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பெற்றுள்ளது.

கல்லூரியின் முதலிரு தளங்களில் பாதுகாப்புக் கம்பிகள் அமைக்கவும், மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைக்கவும், காவலர்அறை கட்டவும் இவ்வாண்டு நிதி ஒதுக்கப்பெற்று அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூபாய் ஒரு லட்சத்திற்கு காட்சித் தொடர்பியல் துறைக்கான ஒலிப் பதிவுக் கருவிகள் வாங்கப்பெற்றுள்ளன. இதனால் காட்சித் தொடர்பியல் மாணவர்கள் பெரிதும் பயன்பெறுவர்.

இவ்வாண்டு மக்கும் குப்பை மக்காத குப்பைகளை சேகரிக்கத் தனித்தனியாக சேமிப்புத்தொட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்த்துறையின் சார்பில் 12.12.19 அன்று பாரதிவிழாவும், 21.1.2020 அன்று திருவள்ளுவர்விழாவும் நடத்தப்பெற்றன.

25.1.2020 அன்று வாக்காளர் தினத்தை ஒட்டி வாக்களார் சேர்த்தல் குறித்த விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பெற்றது. நம் கல்லூரி விடுதலைநாள் விழா, குடியரசு தினவிழா ஆகியனவும் சிறப்புடன் நம் கல்லூரியில் கொண்டாடப்பெற்றன. 30.1.2020 அன்று தீவிரவாத ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழி எடுக்கப்பெற்றது.

**ஆசிரியர்களின் கல்வி சார் பணிகள்**

தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் மு. பழனியப்பன் அவர்கள் இவ்வாண்டு தமிழ்நாடு மாநில் உயர்கல்வி மன்றத்தின் வழியாக ”இராமநாதபுர மாவட்டத் தொன்மை, படைப்பாளுமை, மத நல்லிணக்கக் கூறுகளும் அவற்றின் வெளிப்பாடுகளும்” என்ற தலைப்பின் கீழ் கருத்தரங்கு நடத்த நிதியுதவி பெற்றுள்ளார். அக்கருத்தரங்கு 28.3.2020 அன்று நடைபெற உள்ளது. முனைவர் மு.பழனியப்பன் தமிழ்ச்சுடர் என்ற விருதினை அம்பத்தூர் கம்பன் கழகத்திடம் இருந்தும், பொன்னமராவதி முத்தமிழ்ப்பாசறை என்ற அமைப்பு வழியாகவும் பெற்றுள்ளார்.

ஆங்கிலத் துறைப் பேராசிரியர் திரு. ஈ.சுரேஷ் அவர்கள் மதுரை அமெரிக்கன் கல்லூரி நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில் கட்டுரையாளராகவும், குமாரபாளையம் ஜே.கே.கே நடராஜா கல்லூரி நடத்திய பயிலரங்கில் பயிற்றுநராகவும் கலந்து கொண்டார். மேலும் இவர் மதுரை அமெரிக்கன் கல்லூரி வெளியிடும் சர்வதேச இதழிலும் கட்டுரை எழுதியுள்ளார்.

ஆங்கிலத் துறை கௌரவ விரிவுரையாளர் திரு. அ.சரத்குமார் 24.9.2019 அன்று முனைவர் பட்டம் பெற்றார். தமிழ்த்துறை சார்ந்த கௌரவ விரிவுரையாளர்கள் சு. தொண்டியம்மாள், க. சத்தியா, மு.பத்மா, கோ.அழகுராஜா, ப. கார்த்திகேயன் ஆகியோர் சென்னையில் நடைபெற்ற ஜெயகாந்தன் குறித்தான பன்னாட்டுக் கருத்தரங்கில் கட்டுரை அளித்துள்ளனர். அக்கட்டுரைகள் சிறகு இணைய இதழிலும் வெளிவந்துள்ளன.

மேலும் முனைவர் பத்மா, திருமிகு சத்யா ஆகியோர் திண்டுக்கல் வளர் தமிழ் ஆய்வுமன்றக் கருத்தரங்கிலும், திரு ப. கார்த்திகேயன், திருமிகு தொண்டியம்மாள் அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்திய கருத்தரங்கிலும் கலந்து கொண்டனர்.

**<u>மாணவ மாணவியர் வளர்ச்சிப் பணிகள்</u>**

இக்கல்லூரியின் மாணவ மாணவியர்கள் கல்வித் திறனிலும், விளையாட்டுத் திறனிலும் ஆர்வம் மிக்கவர்களாக வளர்ந்து வருகிறார்கள்.

இவ்வாண்டு சமத்துவப் பொங்கல் விழா 13.1.2020 அன்று கொண்டாடப்பெற்றது. இதனை முன்னிட்டு நடைபெற்ற கோலப் போட்டியில் முதல் பரிசினை ஆங்கிலத்துறை சார்ந்த மாணவர்களும், இரண்டாம் பரிசினை தமிழ்த்துறை சார்ந்த மாணவர்களும், மூன்றாம் பரிசினை கணிதத்துறை சார்ந்த மாணவர்களும் பெற்றனர்.

அனைவரையும் வாக்காளர்களாக மாற்றுவோம் என்ற நோக்கத்தில் நடத்தப்பெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வினை முன்னிட்டு நடத்தப்பெற்ற பேச்சுப்போட்டியிலும், கட்டுரைப் போட்டியிலும் நம் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டுப் பரிசுகளைப் பெற்றுள்ளனர். இதில் ஆர். அபூர்வவாணி, விஜய் மில்ட்டன், அருந்ததி, அமோகா, எஸ்.வாசகி, என்.சுகப்பிரியா ஆகியோர் பரிசுகளைப் பெற்றனர்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் பிப்ரவரி 4 ஆம் நாள் நடத்திய விவேகானந்தர் மாணவர் படைக்கான புத்தொளிப் பயிற்சி முகாமில் மாணவர்களும், திருமதி வித்யா அவர்களும் கலந்து கொண்டனர்.

11.12.19 அன்று தபால் துறையின் பொது சேவை பற்றிய அறிமுக நிகழ்ச்சி நம் கல்லூரியில் நடைபெற்றது.

இவ்வாண்டு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் வழியாக நடத்தப்பெற்ற ஆண்கள், மற்றும் பெண்களுக்கான தனித்தனி கபாடிப் போட்டிகளிலும், கைப்பந்து போட்டியிலும், தனித்திறன் விளையாட்டுப் போட்டிகளிலும் மாணவ மாணவியகள் கலந்து கொண்டனர். இவர்களுக்கான பயிற்சி ஆடை வழங்கிய திரு. ஆனிமுத்து அவர்களுக்கும், திரு. ராஜேந்திரன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாண்டு விளையாட்டுப்போட்டிகள் பிப்ரவரி மாதம் 28, 29 ஆம் தேதிகளில் நடத்தப்பெற்று இப்போது அதற்கான பரிசுகள் வழங்கப்பெற உள்ளன.

தமிழ்த்துறை மாணவ மாணவியர்கள் தஞ்சாவூர், சித்தன்னவாசல், குடுமியான்மலை ஆகிய இடங்களுக்குக் கல்விச் சுற்றுலா சென்று வந்தனர். ஆங்கிலத்துறை மாணவர்களும், வணிகவியல்துறை மாணவர்களும் பாபநாசம் சிவன் கோயில், மணிமுத்தாறு அணைக்கட்டு போன்ற இடங்களுக்குச் சென்று வந்தனர். காட்சித் தொடர்பியல் மாணவர்கள் ஒரு நாள் கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரிக்கு களப் பயணம் மேற்கொண்டனர்.

**<u>கல்லூரியில் செயல்பட்டு வரும் பிற அமைப்புகள்</u>**

இக்கல்லூரியில் நாட்டுநலப்பணித்திட்டம், இளையோர் செஞ்சிலுவைச் சங்கம், மகளிர் மேம்பாட்டுக்குழு ரெட்ரிப்பன் கிளப்,

விவேகானந்தர் அமைப்பு, Eco கிளப், முன்னாள் மாணவர்கள் சங்கம், பெற்றோர் ஆசிரியர் கழகம், கேலிவதைj; தடுப்புக்குழு ஆகியன சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

**<u>நாட்டு நலப்பணித் திட்டப் பணிகள்</u>**

இக்கல்லூரியில் ஒரு நாட்டு நலப்பணித்திட்ட அலகு செயல்பட்டுவருகிறது. இதன் வழியாக கல்லூரி வளாகத் தூய்மை 24.2.2019, 26.09.2019 ஆகிய நாள்களில் செய்யப்பெற்றது. 16.07.2019 அன்று இளைஞர்களுக்கான சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதில் திருவாடானை குற்றவியல் பிரிவு, நீதிமன்ற நடுவர் உயர்திரு பாலமுருகன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி லூர்துமேரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

17.07.2019, 16.09.2019 ஆகிய நாள்களில் கல்லூரி வளாகத்தில் மரங்கள் நடப்பெற்றது. அவை பாதுகாக்கப்பெற்று வருகின்றன. 06.09.2019 அன்று சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மூலம் தேசிய ஊட்டச்சத்து நாள் கொண்டாடப் பட்டது.

31.10.2019 அன்று NATIONAL UNITY DAY உறுதிமொழி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எடுத்துக்கொண்டனர். 21.02.2020 அன்று நாட்டு நலப்பணித்திட்டமும், மகளிர் மேம்பாட்டுக் குழுவும், மகிளா சக்தி கேந்திரா திட்டத்துடன் இணைந்து மாணவிகளுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கினை நடத்தின.

**<u>இளையோர் செஞ்சிலுவைச் சங்கச் செயல்பாடுகள்</u>**

இவ்வாண்டு இளையோர் செஞ்சிலுவைச் சங்கத்தின் நூற்றாண்டு விழாவாகும். இதனை முன்னிறுத்தி இராமநாதபுரம் செய்யது அம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் நம் கல்லூரிக்குப் பரிசுக் கேடயம் வழங்கப்பட்டது.

நம் கல்லூரியில் இரத்த தான முகாம் சிறப்புடன் நடைபெறச் செய்தமைக்காக மாவட்ட ஆட்சியரும் விருது வழங்கியுள்ளார்.

**விவேகானந்தா கேந்திரம்**

கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரம் மற்றும் நமது கல்லூரியும் இணைந்து நடத்திய கல்லூரி மாணவர்களுக்கான பண்பாட்டுப் போட்டித் தேர்வு 7.2.2020 அன்று நடத்தப்பட்டது. இதில் 90 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வேலை வாய்ப்பு மற்றும் வழிகாட்டு மையம்**

நமது கல்லூரியில் 18.7.2019 அன்று டிஎன்பிஎஸ்ஸி போட்டித் தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சி முகாம் துவங்கி வைக்கப்பட்டு அதன் வழியாகத் தொடர் பயிற்சியினைப் பெற்று மாணவ மாணவியர்கள் தேர்வுகளை எழுதினர்.

இவ்வாண்டு மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவ மாணவியருக்கு இரு வகையான தன்னார்வத் தொழில் பயிற்சிகள் ரூசா திட்டத்தின் வழி அழகப்பா பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்பட்டன. “டெலிகாம்” பயிற்சியும், “டூரிசம் அண்ட் ஹாஸ்பிட்டாலிட்டி” பயிற்சியும் வழங்கப்பட்டன. இதில் நூற்றைம்பது மாணவ மாணவியர்கள் பயன் பெற்றனர். கேலி வதைத் தடுப்புக் குழுவிற்கான ஆலோசனைக் கூட்டத்திலும், கொரோனா வைரஸ் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கிலும் நம் கல்லூரி சார்பில் திரு. கோ. அழகு ராஜா கலந்து கொண்டு, பயிற்சி பெற்றார்.

இவ்வாறு நம் கல்லூரி பல்வேறு நிலைகளிலும் வளர்ச்சி பெற்று வருகிறது. இதன் வளர்ச்சிக்கு உதவி புரிந்து வரும் அனைவருக்கும் எம் நன்றிகள். நாளும் கல்வி பயிற்றுவித்தும் பயின்றும் அறிவு மிக்க சமுதாயத்தை நாளும் வளர்ப்போம்.